# பாடம் 21: இயேசுவின் எய்துபணி
# (கடவுளின் அரசு)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (7 வயது) | : 1 முதல் 9 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (10 வயது) | : 1 முதல் 12 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (13 வயது) | : 1 முதல் 15 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், இயேசு கிறிஸ்து என்ற நபரில் மனிதரான கடவுளின் உடலேற்பு குறித்து நாம் கற்றோம். உண்மையில் மனிதரான இயேசு கிறிஸ்து உண்மை கடவுளாக இருந்ததையும் நாம் கற்றோம். அவர் நேர்த்தியான (நிறைவான) மனிதராக, இரண்டாம் ஆதாமாக இருந்தார். இந்த பாடத்தில், தமது மகன் வழியாக கடவுள் செய்த எய்துபணியைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. இஸ்ரயேல் மற்றும் முழு உலகிற்கும் வாக்களிக்கப்பட்ட மீட்பராக இயேசு இருந்தார். கடவுளுக்கு இஸ்ரயேலின் கீழ்ப்படியாமை, மனிதகுலத்தின் பாவ வழிகளுக்கும் கடவுளுக்கான நமது தேவைக்கும் ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது. கடவுளுக்கு நம்பகமற்ற இஸ்ரயேலின் பாவம் குறித்து விவிலியம் நமக்கு கூறினாலும், நம்பகமின்மை என்ற இந்த பிரச்சனை இஸ்ரயேலுக்கு மட்டுமானது அன்று, மனிதகுலம் முழுவதற்கும் உண்மையானது.

*எசாயா 53:6:* ‘‘ஆடுகளைப் போல நாம் அனைவரும் வழிதவறி அலைந்தோம், ஒவ்வொருவரும் தமது சொந்த வழியில் நடந்தோம்…’’

உரோமையர் 3:23: ‘‘எந்த வேறுபாடும் இல்லை: எல்லாருமே பாவம் செய்து கடவுளின் மாட்சியில் குறைவுபட்டுள்ளனர்…’’

2. கடவுளே படைப்பின் ஆதாரமாக இருக்கின்றார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது, அவர் நமது முதல் பெற்றோரைப் படைத்த பொழுது, அவர் அதை மனிதகுலத்தின் ஆளுகையின் கீழ் வைத்தார். கடவுளின் ஒரே அதிகாரம் மற்றும் ஆண்டவர்த்துவத்துக்கு எதிராக ஆதாமும் ஏவாளும் முழுமனதோடு கிளர்ந்தெழ ஏமாற்றப்பட்ட பொழுது இந்த ஆளுகை சாத்தானின் கைகளுக்குச் சென்றது.

இதன் காரணமாக, இயேசு -- குறைந்தது மூன்று முறை -- சாத்தானை இவ்வுலகின் தலைவன் என்று அடையாளப்படுத்தியதை யோவான் நற்செய்தி பதிவு செய்கிறது (யோவா 12:31-32, 14:30-31, 16:7-11). மனிதகுலத்தின் வீழ்ச்சியில், படைப்பு தற்போது அலகையின் சட்டப்பூர்வ ஆளுகையின் கீழ் வந்துவிட்டது. உறுதியாக, கடவுள் தமது கட்டுப்பாட்டை இழந்துவிட்டார் என்பது இதன் பொருளன்று, (பகைவன் எதை அறிய கடவுள் அனுமதிக்கிறாரோ, அதை மட்டுமே அவன் அறிய முடியும் என்பதால்) அலகை எதுவும் அறிந்திராத திட்டங்களை அவர் கொண்டிருந்தார்.

3. இதனிடையே, வீழ்ச்சி நிகழ்ந்த பொழுது, மனிதரின் வாழ்விடத்தை கடவுள் ‘‘மாற்றியதாக’’ தெரிகிறதை புனித மறைநூலில் நாம் காண்கிறோம். நமது வீழ்ச்சிநிலையில் இருந்து நாம் மீட்கப்படுவதற்கான தேவை குறித்து மனிதகுலம் தொடர்ந்து விழிப்புணர்வுடன் இருப்பதற்காக, நாம் வாழும் சூழ்நிலையில் சாதகமின்மையை உருவாக்க கடவுள் படைப்பை ‘‘சபித்தார்’’.

*தொடக்க நூல் 3:17:* ‘‘அவர் மனிதனிடம், ‘உன் மனைவியின் சொல்லைக் கேட்டு, உண்ணக் கூடாது என்று நான் கட்டளையிட்டு விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டதால் உன் பொருட்டு நிலம் சபிக்கப்பட்டுள்ளது. உன் வாழ்நாளெல்லாம் வருந்தி உழைத்து அதன் பயனை நீ உண்பாய்.’’

அதனால் இழந்த நேர்த்தியை மீட்டெடுக்க மனிதகுலம் ஏங்கும். அவ்விதமாக, (700 ஆண்டுகள் நாடுகடத்தலின் கீழிருந்த) இஸ்ரயேலர் கடவுள் மட்டுமே கொணர முடிந்த அமைதிக்காக (எபிரேயத்தில்: ஷலோம்) ஏங்கித் தவித்தனர்.

4. கடவுளின் இறைத் திட்டத்தில், சாத்தானின் ஆதிக்கத்தால் பறிக்கப்பட்ட அரசை மீட்டுருவாக்குவதே கடவுளின் நித்திய மகனாகிய இயேசுவின் எய்துபணியாக இருந்தது. மற்ற வார்த்தைகளில், கடவுளின் அரசு அல்லது விண்ணரசின் புதியத் தொடக்கத்தை அறிவிக்கவே இயேசு வந்தார். 30 வயதில் தமது பொது திருப்பணியை அவர் தொங்கியதில் இருந்து கடவுளின் அரசைக் குறித்து போதிப்பதற்கே அவர் முன்னுரிமை அளித்தார். ஆனால் தமது பொது திருப்பணியைத் தொடங்கும் முன்பு, இயேசு முதலில் இரண்டு அனுபவங்களுக்குள் செல்ல வேண்டியிருந்தது: அவரது திருமுழுக்கு மற்றும் அவரது பாலைநிலச் சோதனை.

5. யோர்தான் நதியில் இயேசுவின் திருமுழுக்கு பற்றி மத்தேயு 3:13-17ல் வாசிக்கவும். இயேசு ஒரு பாவியில்லை என்றால் அவர் ஏன் திருமுழுக்கு பெற வேண்டும் என்றொரு கேள்வி எழுகிறது, ஏனெனில் (அக்காலத்தில் அது ஓர் அருளடையாளமாக இல்லை என்றாலும்) திருமுழுக்கு என்பது மனந்திரும்பும் செயலாக இருந்தது. தண்ணீர், மறைநூலில், எப்போதும் அழிவின் அடையாளமாகவே பயன்படுத்தப்படுகிறது (எடுத்துக்காட்டாக, நோவா மற்றும் அவரது பேழையோடு தொடர்புடைய வெள்ளப்பெருக்கு). திருமுழுக்கு தண்ணீரில் நுழைவதில், மனித குலத்தின் பாவங்களுக்காகத் தமக்கு வரவிருந்த இறப்பை இயேசு ஏற்றுக்கொண்டார். அவர் சிலுவையை நோக்கித் தமது வழியைப் படிப்படியாக உருவாக்கியதன் வழியாக நம்மோடுத் துணையிருக்க மனிதகுலத்தின் இருள்நிலைக்குள் நுழைந்தார். இவ்வாறு செய்ததில், தண்ணீர் இயேசுவைப் புனிதமாக்கவில்லை மாறாக அவரே உண்மையில் தண்ணீரைப் புனிதமாக்கினார். பாவிகளுக்குத் திருமுழுக்கு வழங்கப் பயன்படுத்துமாறு இயேசு தண்ணீருக்குத் திருமுழுக்கு வழங்கினார் என்று நாம் கூறலாம்.

இயேசு திருமுழுக்கு பெற்றபோது அவர்மீது வந்த தூய ஆவி, அவரது மெசியா அலுவலின் நிறுவலைக் காட்டுகிறது. பழைய ஏற்பாட்டில், இஸ்ரயேலின் அரசர்களும் குருக்களும் தங்கள் பணிகளுக்காகத் திருப்பொழிவு செய்யப்பட்டனர், அதாவது, அவர்கள் தலையில் எண்ணெய் வார்க்கப்பட்டது. இந்தத் திருப்பொழிவு, அந்நபர் ஏற்கும் அலுவலுக்காக கடவுளின் ஆவியைக் கொண்டு அவரை நிறுவுவதன் காணப்படும் அடையாளமாக இருந்தது. உண்மையில், கிறிஸ்து (எபிரேயத்தில்: *மஷியாக்*) என்ற பட்டத்திற்கு “திருப்பொழிவு பெற்றவர்” என்று பொருள். இயேசுவின் மீது தூய ஆவி வந்தது, பார்த்தவர்கள் எல்லாரின் முன்னிலையில், அவர்களுக்கு புரிந்தாலும் இல்லாவிட்டாலும், கடவுள் அவருக்கு அரசத்துவ மற்றும் குருத்துவ மாண்பினை வழங்குகிறார் என்பதன் அடையாளமாக இருந்தது.

6. யூதேயப் பாலைநிலத்தில் இயேசுவின் சோதனை குறித்து மத்தேயு 4:1-11ல் வாசிக்கவும். கடவுள் தமது அரசைத் தமக்குரிய நேரத்தில் மீட்டுருவாக்குவார் என்பதை சாத்தான் அறிந்திருந்தாலும், இயேசுதான் உண்மையில் வரவிருந்த கடவுளின் மகனா என்பதில் அவன் தெளிவின்றி இருந்தான். சாத்தானின் சோதனைகளுக்காக இயேசு பாலைநிலத்துக்குச் சென்றப் பிறகுதான், அவரது மெய்யான அடையாளம் அவனுக்கு அறியச் செய்யப்பட்டது.

சிரியரான புனித எப்ரேம்: “அவன் இயேசுவைச் சோதித்தான் ஏனெனில் கிறிஸ்துவின் இறைத்தன்மையின் தெளிவான அறிகுறி அதுவரை விண்ணகத்தில் இருந்து தரப்படவில்லை.”

தமது திருமுழுக்கினால், இயேசு தம்மை அலகையால் சோதிக்கப்பட அனுமதித்து மனித இருப்பின் இடர்களுக்குள் உடனடியாக நுழைந்தார். அவரது திருப்பணி மற்றும் பலியிலிருந்து தொடரும் கிறிஸ்தவ வாழ்வின் புதிய எடுத்துக்காட்டை அவர் வெளிக்காட்டினார் என்று நாம் கூறலாம். திருமுழுக்கு அவரைப் பின்தொடர்வோரை சாத்தானின் வல்லமையில் இருந்து விடுதலை பெறுகின்ற புதிய நிலைக்குள் வைக்கிறது. உறுதிபூசுதல் அவர்கள் மீது தூய ஆவியின் கொடையைப் பொழிகிறது, மேலும் இந்த அருளடையாளங்கள் அவர்கள் மீது அலகை ஏற்படுத்த முயற்சிக்கும் செல்வாக்கை வீழ்த்த ஆற்றல் அளிக்கின்றன. சாத்தானால் சோதிக்கப்பட்ட வேளையில் இயேசு அளித்தப் பதிலிறுப்பால், அவர் இதை வல்லமையாக வெளிக்காட்டினார்.

அலகை நமக்கு வழங்கும் சோதனைகள் பெரும்பாலும் நமது வாழ்வின் அவசர நிலைகளால் கடவுளை குறைந்த முக்கியத்துவம் கொண்டவராக (அல்லது முக்கியத்தும் அற்றவராக) புறந்தள்ள வற்புறுத்துகின்றன. அவசரத் தேவையாகத் தெரிகின்றப் பல தருணங்களில், பசி அல்லது உடல்சார் ஆபத்து போன்றவற்றில், அதில் கடவுள் எதுவும் செய்ய வலுவற்றவர், அதனால் நாம் அவரது அரசுரிமையை நம்புவதை நிறுத்த வேண்டும் என்று எண்ண அலகை தூண்டுகிறது. பின்னர் அலகை ஒரு “சிறந்த” வழியை முன்மொழிகிறது: இந்த தருணங்களில்

நமது சொந்த ஆற்றல்களைப் பயன்படுத்தி செய்வதே நமக்கு மெய்யானதாக உணரச் செய்கிறது. கடவுள் தமது சொந்த காலவரிசைக்கு ஏற்ப செயல்களைச் செய்கிறார், நமது திட்டங்கள் கடவுளின் விருப்பத்தைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதை நாம் மறக்கச் செய்து, நம்மை அது அச்சுறுத்துகிறது. ஆனால் நமது திருமுழுக்கு மற்றும் உறுதிபூசுதலில், இந்தத் தீவிர ஏமாற்று வேலையை வீழ்த்தும் ஆற்றலைப் பெறுகிறோம் என்பதை மனிதர்களுக்கு இயேசு வெளிக்காட்டுகிறார்.

யூதேயப் பாலைநிலத்தில் தமது திருமுழுக்கு மற்றும் சோதனையோடு, இயேசு தமது பொது திருப்பணியைத் தொடங்கினார்.

7. கடவுளின் அரசே இயேசுவின் போதனையின் மையச் செய்தியாக இருந்தது. அதனாலே தமது திருப்பணி முழுவதும் அவர் கடவுளின் அரசைப் பற்றிப் பேசியதை நாம் காண்கிறோம். புதிய ஏற்பாட்டில் "கடவுளின் அரசு" (இறையாட்சி) குறித்தச் சுட்டல்கள் 72 தடவையும், "விண்ணரசு" என்பது 32 தடவை (எல்லாம் மத்தேயு நற்செய்தியில்) காணப்படுகின்றன. இரு பதங்களும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் மாற்றிமாற்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

*மத்தேயு 4:17:* "… இயேசு, 'மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது' எனப் பறைசாற்றத் தொடங்கினார்."

*மத்தேயு 6:33:* "அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள், அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்."

*மாற்கு 1:14-15:* "யோவான் கைது செய்யப்பட்டபின், கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றிக் கொண்டே இயேசு கலிலேயாவிற்குள் சென்றார். 'காலம் நிறைவேறிவிட்டது, இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்' என்று அவர் கூறினார்."

*லூக்கா 10:9:* "அங்கு உடல்நலம் குன்றியோரை நலமாக்கி, இறையாட்சி அவர்களை நெருங்கி வந்துவிட்டது எனச் சொல்லுங்கள்."

*யோவான் 3:5:* "இயேசு பதிலளித்தார்: 'ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன்.'"

8. இயேசுவின் படிப்பினைகள் எல்லாம் கடவுளின் அரசுக்குள் மக்கள் எப்படி நுழையலாம் என்பதைக் காட்டுவதாகவே வடிவமைக்கப்பட்டிருந்தன. அவரது வல்லச் செயல்கள் கடவுளின் அரசு அவர்களிடையே வந்துவிட்டது என்பதை மக்களுக்கு எண்பிப்பதாக அமைந்தன. அவரது உவமைகள் கடவுளின் அரசு குறித்த உண்மைகளைச் சித்தரித்தன.

நவீன உலகில் இருக்கின்ற நமக்கு "அரசு" என்ற வார்த்தை மிக வினோதமாகத் தெரிகிறது, ஏனெனில் நவீன உலகின் பெரும்பாலான நாடுகள் ஓர் அரசரைக் கொண்டிருக்கவில்லை. அரசுக்கு மாற்றாக, இயேசு *ஆட்சியம்* பற்றி அறிவித்தார் என கூறலாம். கடவுளின் அரசு அல்லது விண்ணரசு விரைவில் நிகழப்போவதால் இஸ்ரயேலர் தங்களைத் தயாரிக்குமாறு இயேசு அறிவித்தார்.

9. மனிதர்கள் பாவத்தில் விழுந்ததால் இந்த உலகம் அலகையின் ஆட்சியின் கீழ் சென்றது என்றால், கடவுளின் ஆட்சி எவ்வாறு மலரும்? ஒரு விலை செலுத்தப்பட வேண்டும். ஒரு மீட்பீடு செலுத்தப்பட வேண்டும். மேலும் வீழ்ச்சியுற்ற மனிதர்களின் சார்பாக இயேசு அதை விரைவில் செலுத்தப் போகிறார். ஆனால் அவர் இந்த விலையைச் செலுத்தும் முன்பு, அவர் முதலில் மனித இதயங்களைத் தயார் செய்வதில் இந்த மூன்று ஆண்டுகளைச் செலவிட்டார், அதனால் கடவுளின் ஆட்சி உலகில் வரும்போது, அன்பிலும் கீழ்ப்படிதலிலும் பலர் தங்களது இதயங்களை கடவுளுக்கு வழங்குவர்.

கடவுளின் ஆட்சியின் கீழ் மட்டுமே அறுதியான நீதியும் அமைதியும் மீண்டும் ஒருமுறை முழுவதும் மீட்டுருவாக்கப்படும், இவ்வாறு மனிதகுலம் மிக விரும்பும் இளைப்பாறுதலின் நிலை கொணரப்படும். ஹிப்போ புனித அகுஸ்தீன் சரியாக செபிப்பது போன்று, "நீர் எங்களை

உமக்காக உருவாக்கினீர், மேலும் எங்கள் இதயங்கள் உம்மில் ஓய்வு காணும் வரை இளைப்பாறுதல் அடைவதில்லை.

10. பேறுகள் குறித்த இயேசுவின் படிப்பினைகளை மத்தேயு 5:1-12ல் வாசிக்கவும். கடவுளின் ஆட்சியின் கீழ் வாழும்போது மக்கள் கொண்டிருக்க வேண்டிய மனப்போக்குகள் குறித்த இயேசுவின் இந்த அருளுரைக்கு ''பேறுபெற்றோர்'' என்றப் பெயர் விவிலிய வாசகர்களால் வழங்கப்பட்டுள்ளது.

11. இயேசு மக்கள் கூட்டத்துக்கு கடவுளது ஆட்சியின் கீழ் எப்படி வாழ வேண்டும் என்பதைக் கற்பித்தார், இவ்வாறு நமக்காக மகிழ்ச்சியைக் கண்டடையலாம். தமிழ் மொழிபெயர்ப்புகளில் காணப்படும் ''பேறுபெற்றோர்'' என்னும் வார்த்தை *மக்காரியோஸ்* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது, அதற்கு ''மகிழ்ச்சி'' அல்லது ''இன்பம்'' என்பது நேரடிப் பொருளாகும். கடவுளின் அரசுக்கு ஏற்றவாறு வாழ்வோர் தங்களில் ''மகிழ்ச்சி'' அல்லது ''இன்பத்தை'' கண்டடைவர் என்று இயேசு கற்பித்தார்.

12. இந்தப் பேறுகளை நாம் எளிய விதத்தில் புரந்துகொள்ள முடியும்:

''தங்களைத் தாங்களே மீட்க முடியாது என்பதால் ஒரு மீட்பர் தேவை என்று உய்த்துணர்ந்த மக்கள் மகிழ்ச்சியானவர்கள், ஏனெனில் விண்ணகமே அவர்களின் இல்லம்'' (மத்தேயு 5:3ன் பொழிப்புரை).

''தங்கள் வாழ்வில் கெட்டது நிகழும்போது துயருறும் மக்கள் மகிழ்ச்சியானவர்கள், ஏனெனில் கடவுள் அளிக்கும் ஆறுதலால் அவர்கள் ஆறுதல் அடைவர்'' (மத்தேயு 5:4ன் பொழிப்புரை).

''மற்றவர்கள் பொருட்டு தங்களிடம் பணிவும் கனிவும் கொண்ட மக்கள் மகிழ்ச்சியானவர்கள், ஏனெனில் அவர்களுக்கு மண்ணகம் வழங்கப்படும்'' (மத்தேயு 5:5ன் பொழிப்புரை).

''மிகத் தூயோராக இருக்க விரும்பும் மக்கள் மகிழ்ச்சியானவர்கள், ஏனெனில் அவர்களை கடவுள் உண்மையில் தூயோராக்குவார்'' (மத்தேயு 5:6ன் பொழிப்புரை).

''மற்றவர்களுக்கு இரக்கம் காட்டி மன்னிக்கும் மக்கள் மகிழ்ச்சியானவர்கள், ஏனெனில் கடவுள் அவர்களுக்கு இரக்கம் காட்டி மன்னிப்பார்'' (மத்தேயு 5:7ன் பொழிப்புரை).

''தங்கள் செயலிலும் சிந்தனையிலும் கடவுளை எப்போதும் மகிழ்விக்க விரும்பும் மக்கள் மகிழ்ச்சியானவர்கள், ஏனெனில் அவர்கள் கடவுளோடு இருப்பர்'' (மத்தேயு 5:8ன் பொழிப்புரை).

''உலகிற்கும் மற்ற மக்களின் வாழ்விற்கும் எப்போதும் அமைதி கொணர முயற்சிக்கும் மக்கள் மகிழ்ச்சியானவர்கள், ஏனெனில் அவர்கள் கடவுளின் மகன்களாகவும் மகள்களாகவும் இருப்பர்'' (மத்தேயு 5:9ன் பொழிப்புரை).

''சரியானதைச் செய்வதற்காக இன்னலில் சிக்கும் மக்கள் மகிழ்ச்சியானவர்கள், ஏனெனில் அவர்களுக்கு விண்ணகம் வாக்களிக்கப்பட்டுள்ளது'' (மத்தேயு 5:10ன் பொழிப்புரை).

''இயேசுவின் பொருட்டு மக்கள் உங்களை இழிவுப்படுத்தி, அல்லது உங்களை புண்படுத்தும் பொழுது மகிழ்ச்சியானவர்கள். மிக மகிழ்ச்சியாக இருங்கள், ஏனெனில் விண்ணகத்தில் பெரும் வெகுமதிகள் வாக்களிக்கப்பட்டுள்ளன. விவிலிய உள்ள இறைவாக்கினர்களும், கடவுளுக்குக் கீழ்ப்படிந்ததால் அதே போன்று நடத்தப்பட்டனர்'' (மத்தேயு 5:11-12ன் பொழிப்புரை).

13. இயேசுவின் நாள்களில், யூதர்கள் கொடூர ரோமைப் பேரரசின் கீழ் இருந்ததால் மிகவும் துன்புற்றனர். அவர்களின் நிலங்களை ரோமை ஆட்சியாளர்கள் பறித்துக் கொண்டனர், அதிகப் பணம் செலுத்த அவர்களை வற்புறுத்தினர், மேலும் அவர்களின் மனைவியர், அன்னையர், மற்றும் சகோதரிகளை பாலியல் வன்கொடுமை செய்தனர். இந்த ரோமை ஆட்சியாளர்களுக்கு எதிராக கிளர்ந்தெழும் எந்த யூதரும் கொல்லப்படுவர். ஏற்கெனவே மோசே வழியாக கடவுள் வழங்கியச் சட்டங்கள், பிற இனத்தாரால் யூதர்கள் ஆளப்படக் கூடாது என்று கூறுகின்றன

(இணைச்சட்டம் 17:15). கொடூரமான பிற இனத்தார் அவர்கள் மீது ஆட்சி செலுத்தியது நிலைமையை மிகவும் மோசமாக்கியது.

14. அடிக்கடி, யூதக் கிளர்ச்சிக் குழுக்கள் (அதாவது, ரோமை அதிகாரத்தைத் தடுத்து சவால் விடுக்க முயற்சிக்கும் மக்கள்) இந்த வெளிநாட்டு ஒடுக்குவோருக்கு எதிரானத் தாக்குதலை நடத்த கலிலேயக் குன்றுகளில் ஒளிந்து கொள்வர். ஆகவே கலிலேய மலைமீது இயேசு மக்கள் கூட்டத்தை நடத்திச் சென்றபோது, இந்தப் புகழ்பெற்ற அற்புதம் செய்யும் போதகர் அவர்களை அங்கு கொணர்ந்தது தமது புதிய அரசு பதாகையின் கீழ் ரோமைப் பேரரசுக்கு எதிரானக் கிளர்ச்சியைத் திட்டமிடவே என்று மக்கள் பலரும் எதிர்பார்த்தனர்.

அவர் அமைதி மற்றும் ஒப்புரவு குறித்த நீண்டச் செய்தியை (மத்தேயு 5-7) போதித்தபோது, அவர்கள் அதிர்ச்சி அடைந்திருக்க வேண்டும். இந்த முழு அருளுரையும் ‘‘மலைப்பொழிவு’’ என்று அழைக்கப்படுகிறது. மலைப்பொழிவு அருளுரையின் ஒரு பகுதியாக பேறுகள் உள்ளது. ‘‘கனிவுடையோர் பேறுபெற்றோர்’’ (மத் 5:5), ‘‘இரக்கமுடையோர் பேறுபெற்றோர்’’ (மத் 5:7), ‘‘அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்’’ (மத் 5:9), ‘‘மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தும் பொழுது நீங்கள் பேறுபெற்றோர்’’ (மத் 5:7) என்பது போன்றப் படிப்பினைகள் அனேகமாக அதைக் கேட்டோருக்கு அதிர்ச்சியாக இருந்திருக்கும், ஏனெனில் இந்தப் படிப்பினைகள் ரோமை அதிகாரிகளுக்கு எதிராகக் கலிலேய மலைக்கு வந்தக் கிளர்ச்சியாளர்களின் உணர்வுகளுக்கு முரணாக இருந்தன. இயேசுவின் நாள்களில் ரோமைப் பேரரசின் கீழ் யூதர்கள் அனுபவித்தத் துன்பங்களை நோக்கினால், ‘‘உங்கள் எதிரிகளை அன்பு செய்யுங்கள், மேலும் உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள்’’ (மத்தேயு 5:44) என்பது போன்ற படிப்பினைக்குக் கீழ்ப்படிவது மிகவும் கடினமான ஏற்கவியலாத அறிவுரையாக இருந்திருக்கும்.

15. மலைப்பொழிவு அருளுரை, அதேபோன்று (அதன் ஒரு பகுதியான) பேறுகள், இயேசுவைப் பின்பற்றுவோராகக் கருதும் நமக்குப் பொருந்துவதாக இன்றும் தொடர்கிறது. அது எளிதில் பின்பற்றுவதற்காக வடிவமைக்கப்படவில்லை. மாறாக, நம்மைத் தூயோராக உருவாக்கவும், நம் இதயங்களிலும் வாழ்விலும் கடவுளின் ஆட்சிக்கு நம்மைத் தயாரிக்கவும் வடிவமைக்கப் பட்டுள்ளது.

நமது வாழ்வில் உள்ள மோசமான எதிரிகள் குறித்து நாம் சிந்தித்து, அவர்களை நாம் நடத்துகின்ற விதத்தில் மலைப்பொழிவு அருளுரையைச் செயல்படுத்த விரும்புகிறோமா என்று பார்க்க வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே நமக்கு விண்ணரசில் இடம் கிடைக்கும்.